அவர்களே சொன்னார்கள். அந்த வீட்டுக்குரியவர்கள் மீது வழக்குப் போடவேண்டுமென்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நல்ல வழக்கறிஞர். எனவே, அவரே அது குறித்து வழக்கு தொடுத்து நஷ்ட ஈட்டை அந்த வீட்டுக்காரர்களிடமிருந்து அந்த குழந்தைகளுக்காகப் பெற்றுத் தரலாம்.

அது மாத்திரமல்ல, அவர்கள் பெற்றுத் தருகின்ற நஷ்ட ஈட்டோடு அந்தக் குழந்தைகளை இழந்து தவிக்கின்ற அந்த இரண்டு குடும்பங்களுக்கும் முதல்வர் அவர்களுடைய நிதியிலிருந்து தலா இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். பேரவையிலே நேற்றைய தினம் நம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது நாங்கள் வெளிநடப்பு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. இப்போது நடைபெறுகின்ற அலுவல் தொடர்பாக மட்டும்தான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியுமே தவிர வேறு எழுப்ப முடியாது. வழக்கறிஞராகிய உங்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

(ஏ) சேரன்மாதேவித் தொகுதியிலுள்ள வறட்சி நிலை குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியின் வறட்சி நிலைமை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டு உண்மையாக இருக்குமானால் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எனக்கு அனுப்பிய பட்டியலை இப்போது கையிலேயே கொண்டு வந்திருக்கிறேன். உண்மையாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறையிலே வந்து கொடுத்தால் நான் உண்மையாக இருக்குமானால் பரிசீலிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவி தொகுதிக்கு நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் நிறையச் செய்திருக்கின்றார்கள். அவருடைய பதவியைப் பயன்படுத்திச் செய்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் அவர் ஒருவர் தப்பித்தார் என்பதும் எனக்குத் தெரியும்.

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS